DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 23 /2024 |
| Deposition of witness | : | P. W – 5 |
| Name | : | புனிதம் |
| Father's /Husband Name | : | கார்த்திகேயன் |
| Village | : | செதளபதி |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 45 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 07th day August 2025.
Accused A1, A2, A4 present. A3 absent petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:–**

இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எனது கணவர். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே நிலப்பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த 02.01.2022–ம் தேதி இரவு 08.00 மணியளவில் நானும், எனது மாமியார் அலமேலு என்பவரும் எங்கள் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தோம். அப்போது எனது கணவர் கார்த்திகேயன் வீட்டிற்குள் இருந்தார். சின்னையா என்கிற முருகவேல், சதீஷ், முஸ்லீம் வீட்டு பையன் மற்றும் சங்கர் ஆகியோர்கள் எங்கள் வீட்டு வாசலில் வந்து எனக்கு தற்போது சொல்ல கூச்சமாக இருக்கும் அறுவருக்கத்தக்க வார்த்தைகளால் அசிங்கமாக பேசினார்கள். எனது கணவரை கோசாபயலே என்று அசிங்கமாக திட்டினார்கள். அப்போது 1–ம் எதிரி முருகவேல் கத்தியால் எனது வயிற்றில் குத்த வந்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

போலிசார் என்னிடம் தனிப்பட்ட முறையில் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். போலிசாரிடம் கத்தியால் குத்த வந்த விபரத்தை கூறினேனா என்றால் கூறினேன். என்னை ஆண் போலிசார்

விசாரித்தார். அய்யர் பெயரில் உள்ள சொத்தை எனது கணவர் என் பெயருக்கு எழுதி வைத்தார் என்றால் சரிதான். நான் சொத்தை கதிர்வேல் குடும்பத்திற்கு எழுதி வைத்தேன் என்றால் சரிதான். எதற்காக கதிர்வேல் குடும்பத்திற்கு எழுதிவைத்தேன் என்றால் பணத்திற்கு விற்பதற்காக எழுதிவைத்தேன். நான் பணத்திற்காக விற்கவில்லை என்றால் சரியல்ல. கதிர்வேல் ஊரில் இல்லாததால் என்னை எழுதி வைக்க சொன்னதன் காரணமாக நான் எழுதிவைத்தேன் என்றால் சரியல்ல. போலிசாரிடம் புகார் அளித்தபிறகு நான் சொத்தை கதிர்வேல் வகையறாவுக்கு எழுதிவைத்தேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் பொய் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.20 19:35:58 +0530